**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-3988

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.05.2021

Accepted: 02.06.2021

Published: 01.07.2021

Citation:
Suba, T., and K. Aji. "Pulse Conditions Described in Tamil Medical Texts - A Study" *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 1, 2021, pp. 74–78

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.3988

*Corresponding Author:
subabennet40@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Pulse Conditions Described in Tamil Medical Texts - A Study

**T. Suba**

*Reg.no: 20123014022016*
*Research Scholar, Department of Tamil*
*Annai Velankanni College, Tholayavattam*

**K. Aji**

*Assistant Professor, Department of Tamil*
*Annai Velankanni College, Tholayavattam*

**Abstract -** The Medical system detected by the Ancient Tamils is called Siddha Medicine and Tamil Medicine. There are numerous books on this system of medicine. Among them is Siddha Maruthuva Chintamani, Maranakandi, Agasthya Nool Thirattu and also the Vedic Manuscript Vagada Sangiraha Chintamani. Our body has 72,000 nerves. It is shortened and divided into Dasanadi, Panchanadi and Vatha Pitha Kapa. It is also known as Idakalai (vatham), Pinkalai (pitham) and Suli munai (ayyam). Nadi is seen in ten places but karam (hand) is considered to be the best place. It is considered to be an ideal place for women to look for the left and men the right hand. This study clearly explains how to hold the pulse, how the pulses walk, and what happens due to differences in the pulse.

**Key Words:** Siddha systems, Medical books, Vathanaadi, Pithanaadi, Silerpananaadi, Neerambal, Thasanaadi, Panchanaadi, Idakalai, Pinkalai, Sulimunai, Paandu, Eelai.

**References**

1. Vakada Sankiraka Sinthamani Olaichuvadi
2. S.Sithamparathanu Pillai, Maranakandi (Sura Nool), Sitha Makuda Publication, Chennai- 30.
3. Dr. M. Anaivaari Ananthan, Sitha Maruthuva Sinthamani, United Bind Graphics, Chennai.
4. Dr. Arankarasan, Akathiyar Nool Thirattu, Saraswathi Mahaal Noolaham, Thanjavoor.

# தமிழ் மருத்துவ நூல்கள் கூறும் நாடி நிலைகள் – ஓர் ஆய்வு

***தா. சுபா***
பதிவு எண் : 20123014022016
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்
அன்னை வேளாங்கண்ணி கல்லூரி
தொலையாவட்டம்

***முனைவர் ஓ. அஜி***
உதவிப் பேராசிரியர், தமிழாய்வு மையம்
அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***

*பழந்தமிழரால் கண்டறியப்பட்ட மருத்துவ முறையானது சித்த மருத்துவம் என்றும் தமிழ் மருத்துவம் என்றும் அழைக்கப்படுகிறது. இம்மருத்துவ முறை பற்றி எண்ணற்ற நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் சித்த மருத்துவ சிந்தாமணி, மரண கண்டி, அகத்திய நூல் திரட்டு போன்ற மருத்துவ நூல்கள் மற்றும் வாகட சங்கிரக சிந்தாமணி என்னும் மருத்துவ ஓலைச் சுவடி ஆகியன கூறும் நாடி நிலைகள் பற்றி இவ்வாய்வு கூறுகின்றது. நமது உடலில் 72000 நாடி நரம்புகள் உள்ளன. இதனைச் சுருக்கி, தசநாடியாகவும் பஞ்சநாடியாகவும் வாத பித்த கப என்னும் முக்குற்ற நாடிகளாகவும் வகுத்துள்ளனர். இட கலை வாதம் எனவும் பின்கலை பித்தம் எனவும் சுழி முனை அய்யம் எனவும் அழைக்கப்படுகிறது. நாடியானது பத்து இடங்களில் பார்க்கப்படுகிறது; எனினும் கரமே (கை) சிறந்த இடமாகக் கருதப்படுகிறது. பெண்களுக்கு இடக்கையும் ஆண்களுக்கு வலக்கையும் நாடி பார்க்க உகந்த இடமாகக் கருதப்படுகிறது. நாடியை எவ்வாறு பிடித்துப் பார்க்க வேண்டும் என்பதையும் நாடிகள் நடக்கும் விதத்தையும் நாடி நடை வேறுபாட்டால் நிகழ்பவற்றையும் இவ்வாய்வு ஆய்ந்து தெள்ளத்தெளிவாக எடுத்துரைக்கின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *வாத நாடி, பித்த நாடி, சிலேற்பன நாடி, நீராம்பல், தசநாடி, பஞ்ச நாடி, இடகலை, பின்கலை, சுழிமுனை, பாண்டு, ஈளை. சித்த மருத்துவம், மருத்துவ நூல்கள், தமிழ் மருத்துவம், சித்த மருத்துவம், தமிழ் மருத்துவமுறை*

***ஆய்வுக் குறியீட்டு விளக்கம்***

1. *ம .க .பா – மரண கண்டி பாடல்*
2. *அ .நூ .தி .பா – அகத்தியர் நூல் திரட்டு பாடல்*
3. *வா .ச .சி .பா – வாகட சங்கிரக சிந்தாமணி பாடல்*
4. *சி .ம .சி .பா – சித்த மருத்துவ சிந்தாமணி பாடல்*

**முன்னுரை**

பண்டைத் தமிழர்களால் கண்டறியப்பட்ட மருத்துவ முறையே சித்த மருத்துவமாகும். இதனைத் தமிழ் மருத்துவம் என்றும் அழைப்பர். இம்மருத்துவ முறை பற்றி எண்ணற்ற தமிழ் மருத்துவ நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் அகத்தியர் நூல் திரட்டு, சித்த மருத்துவ சிந்தாமணி, மரண கண்டி போன்ற மருத்துவ

நூல்கள் மற்றும் வாகட சங்கிரக சிந்தாமணி என்னும் மருத்துவ ஓலைச்சுவடி ஆகியன கூறும் நாடி நிலைகள் பற்றி இவ்வாய்வு முன் வைக்கின்றது.

## நாடி

மனித உடல் உறுப்புகளில் சிறந்தது இதயம் ஆகும். இதயத்தின் மூலமாகவே பெரும்பான்மையான தாதுகள் காக்கப்படுகின்றன. இதன் தொழில் வேறுபாடுகளினால் உடல் நலக்குறைவு ஏற்படும். அவற்றை நாடித்துடிப்புகளின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். உடலில் எழுபத்திரண்டாயிரம் நாடி நரம்புகள் உள்ளன. இதனைச் சுருக்கித் தசநாடியாகவும் இதனையும் சுருக்கிப் பஞ்சநாடியாகவும் மேலும் இதனைச் சுருக்கி முக்குற்ற நாடிகளான வாத, பித்த, கப நாடிகளாகவும் அமைத்துள்ளனர்.

வல்லவர் புகழும் நாடி பத்திலே ஏழு நீக்கி நல்லதோர் நாடி மூன்றும் நயந்து நீரறிந்து பாரே (சி.ம.சி.பா.27). பத்துநாடி கூறும் இதில் ஓர்மூன்று கூறக் கேளு (வா.ச.சி.பா.6) என்னும் தொடர்களின் மூலம் பத்து நாடிகளுள் மூன்று நாடிகள் பற்றி அறிய முடிகிறது. மேலும் இடை பின்கலை சுழி முனை தான் என்னும் தொடரின் மூலம் இடை கலை, பின் கலை, சுழிமுனை என்னும் மூன்று நாடிகள் பற்றி அறிய முடிகின்றது. இடையது தான் வாதமாச்சு, சுழிமுனை தான் அய்யமாச்சு, துலங்கி நிற்கும் பித்தம் பின்கலை தானாச்சு (வா.ச.சி.பா.7) என்பதன் மூலம் இட கலை வாதம் எனவும் பின்கலை பித்தம் எனவும் சுழி முனை அய்யம் எனவும் கூறப்படுகிறது. வாத நாடி மலத்திலும் பித்த நாடி நீரிலும் ஐய நாடி விந்துவிலும் தங்கியிருக்கும். வாதமது மலத்தில் சேரும், பித்தமது நீர் சலத்தில் சேரும், அய்யமது விந்தில் சேரும் (வா.ச.சி.பா.13).

## நாடி எழுத்துகள்

அகாரமது சிலேற்பனத்தோடு இணைந்து நிற்கும், பித்தம் உகாரத் தோடாகும், மகாரம் வாதத்தைச் சேரும் (வா.ச.சி.பா.8) என்னும் தொடர்கள் மூன்று அட்சரமாகிய அகாரம் சிலேற்பனத்துடனும் உகாரம் பித்தத்துடனும் மகாரம் வாதத்துடனும் தொடர்புடையதாகக் கூறப்படுகிறது.

## நாடி பார்க்கும் விதம்

நாடியானது குதிகால் சந்து, காமியம், உந்தி, மார்பு, காது, நாசி, கண்டம், புருவம், உச்சி, கரம் ஆகிய பத்து இடங்களில் பார்க்கலாம். இருப்பினும் கரமே நாடி பார்க்கத்தக்க சிறந்த இடமாகக் கருதப்படுகிறது. பெண்களுக்கு இடக்கையிலும் ஆண்களுக்கு வலக்கையிலும் நாடி பார்க்கப்படுகிறது. அருவையர்க்கு இடக்கை, வலக்கை ஆணுக்கு (வா.ச.சி.பா.9). புருஷர்க்கெல்லாம் நாடிதான் வலக்கை ஆகும் தேனெனு மடவார்க் கெல்லாம் திடம்பெற இடக்கை பாரே (சி.ம.சி.பா. 30). ஆடவர்க்கு வலக்கரமு மாகும் கருவுடனே பெண்பிள்ளைக்கு இடக்கரம் (அ.நூ.தி.பா. 9).

வெண்டான இடக்கையை வலக்கை யாலே மேலான வலக்கை யாலே நண்டாகக் கைதேய்த்து நெட்டி வாங்கி நாட்டு மூவிரலுக்கு விரலண்டாமை அண்டாமல் நெட்டாவிட்டுப் பாரு அசைவாகும் வாதபித்த சிலேத்தும மாமே (அ.நூ.தி.பா.9).

விரல்களைக் குழைத்து வலித்துத் தடவி விட்டு நேராக்கி வைத்துக்கொண்டு, தலைமேல் சுவாசம் நேராகச் செல்ல வேண்டி, தலையை மேலே தூக்கி நிமிர்த்து வைத்து, கை மணிக்கட்டு ஓர் அங்குலம் கீழ் ஒரு விரல் வைத்து அதனிடையில் ஒரு நெல்லின் அகலம் இடை விட்டு மூன்று விரலால் நெல்லின் எடை அளவில் இருத்திப் பார்க்க வேண்டும் என்று வாகட சங்கிரக சிந்தாமணி ஓலைச் சுவடி கூறுகிறது. அவ்வாறு சோதித்துப்

பார்க்கும் போது தர்ச்சனியில் (ஆள் காட்டி விரல்) வாதமாகும், மத்திதனில் (நடு விரல்) பித்தமாகும், ஆளுமிக்க விரலில் (மோதிர விரல்) சிலேற்பன நாடி சிறந்து நிற்கும் (வா.ச.சி.பா.10).

கைதனில் நாடி பார்க்கில் பெருவிரலங்குலத்தின் மேலே பிடித்துடன் நடுவே தொட்டால் ஒருவிரலோடில் வாதம் மற்றிருவிர லோடில் பித்தந் திருவிரல் மூன்றி லோடில் சேத்தும னாடி யாமே (சி.ம.சி.பா.1).

**நாடிநடைகள்**

ஆண்களுக்கு வாத நாடி மயில், அன்னம், கோழி போன்றும் பித்த நாடி ஆமை, அட்டை போன்றும் சிலேற்ப நாடி பாம்பு, தவளை போன்றும் இருக்கும் (வா.ச.சி.பா.11). பெண்களுக்கு வாத நாடி பாம்பு போலவும் பித்த நாடி தவளை போலவும் சிலேற்பன நாடி அன்னம் போலவும் நடக்கும் (வா.ச.சி.பா.12).

அகத்திய நூல் திரட்டு வாத நாடி நடை கோழி போன்றும் பித்த நாடி நடை காக்கை போன்றும் அய்ய நாடி நடை மந்தி போன்றும் இருக்கும் என்று கூறுகிறது (அ.நூ.தி.பா.10).

அன்னம் கோழி மயிலென நடக்கும் வாதம் என்றும் ஆமை அட்டை இவையென நடக்கும் பித்தம் என்றும் தவளை பாம்பு போலுமாம் சேட்டுமம் என்றும் நாடி நடைகள் பற்றி சித்த மருத்துவ சிந்தாமணி (பாடல் 2) குறிப்பிடுகிறது.

**நாடிகள் நடக்கும் விதம்**

வாதம் ஒரு மாத்திரை அளவிலும் பித்தம் அரை மாத்திரை அளவிலும் சிலேற்பனம் கால் மாத்திரை அளவிலும் இயங்கும். வாதமோடு அய்யம் இரண்டும் மிஞ்சிடவே பித்தமது மெலிந்து போகும். வாதம் வலிக்கில் நோய்கள் வலுவாகும். சிலேற்பனம் மீறிற்றால் வெகு கடினம் (வா.ச.சி.பா.18). வாதம் முன்னும் பித்தம் பின்னும் கடையாக ஐயமது தோன்ற வேண்டும் பேணப்பா பிணியோர்இப் படியே கண்டால் பிணிதீர்ந்து போச்சு மூவருமே வரிசை தப்பி ஊனில்லாப் பறவையைப் போல் உயர்ந்து நின்றால் (அ.நூ.தி.பா.11) பிணியானது இருக்கின்றது. மூவருமே மூடமானால் மூதண்ட சன்னியும் மூர்க்க மாகும் (அ.நூ.தி.பா.13) அதாவது மூன்றும் இயங்காமல் இருந்தால் சன்னி உண்டாகும். வாதம் குளிர்ச்சியுடன் இருக்க நோயாளி பிழைப்பது அரிது.

வாத நாடி சிலேற்பன நாடி இரண்டும் மிரண்டு ஓடினால் பித்த நாடி மெலிந்து போகும்; வாதமது வலுவானால் நோய்கள் வலுவாகும்; சிலேற்பனம் மீறி ஓடினால் பிழைப்பது வெகு கடினம் என்றும் மூன்று நாடிகளும் உரத்து நின்றால் கனல் வாதம், மண்டை சூலை உண்டாகும்; மூன்று நாடிகளும் மந்தமாக ஓடினால் மூல சூடு, பவுந்திரம் உண்டாகும்; மூன்று நாடிகளும் மெலிந்து நின்றால் மேகம், குத்துளைச்சல், மார்பு வலி உண்டாகும்; மூன்று நாடிகளும் இல்லாமற்போனால் முடிவு நெருங்கி உயிர் போகும் என்றும் வாகட சங்கிரக சிந்தாமணி பாடல்கள் 18, 23 குறிப்பிடுகின்றன.

வாதத்தில் வாதம் சேர்ந்தால் உடல் வலித்தல், நடுங்குதல், உணவு ஏற்காமை போன்றன ஏற்படும். வாதத்தில் பித்தம் சேர்ந்தால் நாக்கு குளறுதல், குளிர் உண்டாதல், காலில் வீக்கம் உண்டாதல் ஆகியன உண்டாகும். வாதத்தில் சிலேற்பனம் சேர்ந்தால் உடல் வலி, தலை வலி, உடல் வீக்கம், உணவு ஏற்காமை, நாக்கு முன் பின் மாறி பேசல், வயிறு வீக்கம், குடலைப் புரட்டுதல் ஆகியன உண்டாகும். பித்தத்தில் பித்தம் இணைந்தால் மயக்கம் உண்டாதல், வாந்தி அதிகமாதல்,

உடல் இளைத்தல், சதை இழந்து எலும்பும் தோலுமாதல், உடல் வற்றி வெளுத்து வறட்சியாய் வீக்கம் உண்டாதல் ஆகிய குணங்களைத் தோற்றுவிக்கும். பித்தத்தில் வாதம் சேர்ந்தால் கழுத்து கால் கை குத்தி வலித்தல், உடல் பதறுதல், எலும்பாய் வற்றுதல், அறிவு மயங்கல், பொறுமை இழத்தல் போன்றன உண்டாகும் என்று சித்த மருத்துவ சிந்தாமணி குறிப்பிடுகிறது.

வாதத்தில் காற்றணுகில் மயக்கமும் கொளுத்தும் காணும் சீதத்தால் சத்தி வேர்வை இக்கிளும் உச்சிக் குத்து போதற்ற கழிச்சல் தாகம் புண்ணியமில்லை கண்டாய் (ம.க.பா.2) என்று கூறுகிறது. பித்தத்தில் தீயணுகில் புலப்பமும் தலை விசர்க்கும் சத்தியும் (வாந்தி) உச்சிக் குத்தும் அசனமும் (தூக்கமின்மை) செல்லவொட்டாது அந்தியும் (எலும்பு) தீப்போல் காயும் (ம.க.பா.4) என்று கூறுகிறது. சிலேற்பனத்தில் சிலேற்பமானால் சீறியே சன்னி உண்டாம் மயக்கமும் தளர்ச்சை வியர்வை மண்டை யோடுச்சிக் குத்தும் சலத்துடன் மலமும் சிக்கி தாகமும் கபமும் மீறும் சிரத்துடன் வலியும் தோன்றில் செ ன்றிடும் சீவனும் தானே (ம.க.பா.5) என்று கூறுகிறது.

வாதத்தால் வாய்வு குன்மம், உதிரத்தில் அண்ட வாய்வு, குடல் வாதம், சடல் வாதம், கொழுத்துக்குத்து, விஷக்கடிகளில் கிருமி ரூட்சை, காதடைப்பு, குத்து வகை, கிறாணி, தோழம் போன்றன ஏற்படும் (வா.ச.சி.பா.30). பித்தத்தால் சுரம், சூலை, சோகை, பாண்டு, கண் நோய், நெற்றியிடி, கிறுகிறுப்பு, உழலை தாகம், கிறாணி, பிற மேகம், கிருமி தோஷம், வெட்டை, சூடு, சல கழிச்சல், மூல முளை, பவுந்திரம் போன்றன ஏற்படும் (வா.ச.சி.பா.31).

சிலேற்பனத்தால் ஈளை, இருமல், தலை நோய், வாய் வெளுப்பு ,மூக்கில் நீர் வடிதல், மண்டை நோய் போன்றன ஏற்படும் (வா.ச.சி.பா.32). வாதத்தில் பித்தம் கூடில் சுரம், சூலை ,இரைச்சல், சலக்கழிச்சல், இளம்பிள்ளைவாதம், காந்தல், சலதோஷம், இருமல் போன்றன ஏற்படும் (வா.ச.சி.பா.33). வாதத்தில் சிலேற்பனம் சேர்ந்தால் சன்னி, மயக்கம், பெருமூச்சு, சோகை, பாண்டு போன்றன ஏற்படும். பித்தத்தில் வாதம் சேர்ந்தால் இருமல், பீனிசம், மண்டைக்குத்து, அரையாப்பு, மூலம் போன்றன தோன்றும் (வா.ச.சி.பா.34). பித்தத்தில் வாதம் தோன்றில் நீராம்பல் (ரத்த சோகை), மகோதரம், பாண்டு, காமாலை, வெப்பு பாவை போன்றன ஏற்படும். சிலேற்பனத்தில் பித்தம் சேரில் வாயூறல், சுரம், பேதி, வாந்தி போன்றன தோன்றும் (வா.ச.சி.பா.35). மேலும் உடலில் சூடு உண்டாகும்; நா உலரும்; வறட்சி உண்டாகும்; சன்னி சுரம் வரும் என பாடல் 38 கூறுகிறது.

**முடிவுரை**

தமிழ் மருத்துவ நூல்களாகிய அகத்தியர் நூல் திரட்டு, சித்த மருத்துவ சிந்தாமணி, மரணகண்டி, வாகட சங்கிரக சிந்தாமணி ஓலைச்சுவடி ஆகியவற்றில் கூறப்படும் நாடி நிலைகளை ஒப்பிட்டு இவ்வாய்வு கூறுகின்றது.

**பார்வை நூல்கள்**

1. வாகட சங்கிரக சிந்தாமணி ஓலைச்சுவடி
2. எஸ். சிதம்பர தாணுப்பிள்ளை, மரண கண்டி(சுர நூல்), சித்த மகுட பிரசுரம், சென்னை.
3. பதிப்பாசிரியர் மரு. ஆனைவாரி ஆனந்தன், சித்த மருத்துவ சிந்தாமணி, யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் ,சென்னை.
4. பதிப்பாசிரியர் ச. அரங்கராசன், அகத்தியர் நூல் திரட்டு, சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.